# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **செல்வி. N. திலகேஸ்வரி, B.Sc., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2024-ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 03-ஆம் நாள், புதன்கிழமை

**REA. No. 165 of 2015 in REP. No. 85 of 2007**
**in**
**O.S. No. 222 of 2004**
**(CNR No. TNSA13-000081-2007)**

தனம் .. மனுதாரர் / 3-ம் எதிர்மனுதாரர்

எதிர்

1. புவனேஸ்வரி
2. முருகேசன் (இறந்தவர்)
3. கருணாகரன் .. எதிர்மனுதாரர்கள் / தீர்ப்பாணை பெற்றவர் மற்றும் தீர்ப்பு கடனாளி

***(இ.ம.வ. எண் 1/2022-ல் கடந்த 10.01.2023 அன்று பிறப்பித்த உத்தரவின்படி 2-ம் எதிர்மனுதாரர் காலமாகிவிட்டார் என்று மனுவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.)***

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 07.12.2023-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.R. வணங்காமுடி அவர்கள் ஆஜராகியும், 2-ம் எதிர்மனுதாரர் காலமாகிவிட்ட நிலையில் 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. மோகனசுந்தரம் அவர்கள் ஆஜராகியும், 3-ம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை

பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர் / 3-ம் எதிர்மனுதாரர் இம்மனுவை நிறைவேற்று மனுவின் விசாரணையை தான் தாக்கல் செய்து அசல் வழக்கு எண் 205/2004-ன் விசாரணை முடிவடையும் வரையிலும் நிறுத்தி வைக்கக் கோரி தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர் / 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :** மனுதாரர் / 3-ம் எதிர்மனுதாரர் தனது மனுவில், நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தானது 24.08.1981 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின் மூலம் 2-ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், 2-ம் எதிர்மனுதாரர் நிறைவேற்று மனு சொத்தைப் பொறுத்து 18.06.1995 தேதியன்று தன்னுடன் ஒரு கிரய ஒப்பந்த ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டதாகவும், அதனடிப்படையில் தான் சேலம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 498/1996-ஐ தாக்கல் செய்திருந்ததாகவும், அவ்வழக்கு ஆத்தூர் சார்பு நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண் 271/1997-ஆக மாற்றம் செய்யப்பட்டு அதன் பிறகு பண வரம்பு காரணத்திற்காக இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அசல் வழக்கு எண் 205/2004 என தற்போது நிலுவையில் இருந்து வருவதாகவும், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர் கிரய ஒப்பந்தம் சம்மந்தப்பட்ட சொத்தைப் பொறுத்து ஒரு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து மாண்பமை சேலம் சார்பு நீதிமன்றத்தில் 16.04.1996 அன்று தீர்ப்பு பெற்றுள்ளதாகவும், அதில் பிரதிவாதிகளான 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் பதிலுரை தாக்கல் செய்யாமல் அவர்களுக்குள் வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு தன்னுடைய கிரய ஒப்பந்தம் குறித்தும், தன்னுடை வழக்கு குறித்தும் சொல்லாமலேயே தீர்ப்பு பெற்றுவிட்டதாகவும், முதல் எதிர்மனுதாரருக்கு அந்த சமயத்தில் திருமணம் ஆகவில்லை என்றும், எதிர்மனுதாரர்கள் அனைவரும் ஒரே வீட்டில் வசித்து வந்ததாகவும், முதல் எதிர்மனுதாரருக்கு 2-ம் எதிர்மனுதாரர் தன்னுடன் போட்டுக் கொண்ட கிரய ஒப்பந்தம் குறித்து நன்கு தெரியும் என்றும்,

அசல் வழக்கு எண் 121/1996-ஆனது 1-ம் எதிர்மனுதாரரும் மற்ற எதிர்மனுதாரர்களும் வஞ்சக கூட்டாக தாக்கல் செய்த வழக்கு என்றும், அதில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையானது மோசடியாக பெறப்பட்டது என்றும், அது தன்னைக் கட்டுப்படுத்தாது என்றும், அசல் வழக்கு எண் 205/2004 வழக்கில் 1-ம் எதிர்மனுதாரரும் ஒரு பிரதிவாதியாக சேர்க்கப்பட்டிருப்பதாகவும், அசல் வழக்கு எண் 222/2004-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை மோசடியாக பெறப்பட்டது என்றும், அந்த தீர்ப்பாணையை நிறைவேற்றம் செய்ய இயலாது என்றும், தான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 205/2004 தற்போது வரையிலும் நிலுவையில் இருந்து வருவதால் முதல் எதிர்மனுதாரர் நிறைவேற்று மனு தாக்கல் செய்திருக்கவே கூடாது என்றும், நிறைவேற்று மனு சொத்தில் தன்னுடைய மகன் மூலமாக தான் தான் சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும், நிறைவேற்று மனு தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டாலும் கூட அசல் வழக்கு எண் 205/2004 தனக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டால் நிறைவேற்று மனு பயனற்றதாகிவிடும் என்பதால் இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

3. **<u>1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>** 1-ம் எதிர்மனுதாரர் தனது எதிருரையில், மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், நிறைவேற்று மனுவின் வழக்கும் 1996-லேயே தாக்கல் செய்யப்பட்டுவிட்டதாகவும், முதல்நிலை தீர்ப்பாணை 14.06.1996 தேதியன்று பிறப்பிக்கப்பட்டு 19.10.2006 அன்று இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகவும், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் தான் தாவா சொத்தின் சுவாதீனத்தை பெறக்கூடாது என்பதற்காக மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றும், அசல் வழக்கு எண் 205/2004-ல் தான் மனுதாரர் தடையுத்தரவு பெற வேண்டுமென்றும், அசல் வழக்கு எண் 222/2004-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை மோசடியாக பெறப்பட்டது என்று நிறைவேற்று மனுவில் மனுதாரர் கேள்வி எழுப்ப இயலாது என்றும், அவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையால் மனுதாரர் பாதிக்கப்பட்டிருந்தால் அவர் மேல்முறையீடு தான் செய்ய வேண்டுமென்றும், மனுதாரர் தரப்பில் தகுந்த வழக்கு எதுவும் இல்லை என்றும், இவ்வழக்கில் முதல்நிலை மற்றும் இறுதிநிலை

தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுவிட்டதால் அசல் வழக்கு எண் 205/2004-ஐ மனுதாரர் தொடர்ந்து நடத்தவே இயலாது என்றும், மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனுதாரர் இம்மனுவை உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 29-ன்கீழ் தாக்கல் செய்துள்ளார். உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 29-ல் நிறைவேற்று மனு நிலுவையில் இருக்கும் நீதிமன்றத்திலேயே தீர்ப்பாணை பெற்றவருக்கு எதிராக வழக்கு நிலுவையில் இருந்தாலோ அல்லது தீர்ப்புக் கடனாளி தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையைப் பொறுத்து வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்தாலோ நிறைவேற்று நீதிமன்றம் செக்யூரிட்டிக்காகவோ அல்லது தக்கதென கருதும் பிற காரணங்களுக்காகவோ தீர்ப்பாணையை நிறைவேற்றம் செய்வதை தடை செய்து அந்த வழக்கு முடிவடையும் வரையிலும் நிறுத்தி வைக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. இம்மனுவில் மனுதாரர் / 3-ம் எதிர்மனுதாரர் தனது மனுவில் 2-ம் எதிர்மனுதாரர் தனக்கு எழுதிக் கொடுத்த நிறைவேற்று மனு சொத்தைப் பொறுத்தான கிரய ஒப்பந்தம் சம்மந்தமாக தான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 205/2004 இதே நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதாக கூறியுள்ளார். ஆனால் அந்த வழக்கு கடந்த 04.11.2023 தேதியன்று வழக்குரையினை இடை மனு எண் 3/2023-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் திருத்தம் செய்ய போதுமான கால அவகாசம் கொடுத்தும் வாதி திருத்தம் செய்யாததால் 04.11.2023 தேதியன்று வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில் தெரியவருகிறது. அசல் வழக்கு எண் 205/2004-ல் விசாரணை முடிவடையும் வரையிலும் நிறைவேற்று மனுவின் விசாரணையை நிறுத்தி வைக்கக்கோரி தான் மனுதாரர் / 3-ம் எதிர்மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு எண் 205/2004 தள்ளுபடியாகிவிட்ட நிலையில் தற்போது இம்மனுவே பயனற்றதாகவிட்டது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அசல் வழக்கு எண் 222/2004-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும்

தீர்ப்பாணைகள் மோசடியாக பெற்றப்பட்டதாக மனுதாரர் / 3-ம் எதிர்மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ளபோதிலும் அதனை ரத்துசெய்ய இதுவரையிலும் மனுதாரர் நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது. மோசடியாக தீர்ப்பாணை பெறப்பட்டிருந்தால் அதனை எதிர்த்து மேல்முறையீடோ அல்லது அந்த தீர்ப்பாணையை ரத்து செய்வதற்ககாக புதியதாக வழக்கோ தான் மனுதாரர் தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் அசல் வழக்கு எண் 222/2004-ல் இறுதிநிலை தீர்ப்பாணை 19.10.2006 தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2006-ம் ஆண்டிலிருந்தே மனுதாரர் அசல் வழக்கு எண் 222/2004 தீர்ப்பாணை பொறுத்து எந்தவித நடவடிக்கையும் ஏன் எடுக்கவில்லை என்பதற்கு மனுதாரர் தரப்பில் எவ்வித காரணமும் கூறப்படவில்லை. எனவே மேற்படி காரணங்களுக்காக இம்மனுவை அனுமதிக்க இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்நீதிமன்றம் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

6. இறுதியாக, மனுதாரர் / 3-ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 03-ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(Sd/- N. திலகேஸ்வரி)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

| | |
|---|---|
| <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் :</u> | இல்லை |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :</u> | இல்லை |

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u> இல்லை

<u>நீதிமன்ற சாட்சிகள் </u>: இல்லை
<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> : இல்லை

(**Sd**/- **N**. திலகேஸ்வரி)

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்.

<u>கூ.மா.உ.நீ., ஆத்தூர்.</u>

**REA**. **No**. 165/2015

**in**

**REP**. **No**. 85/2007

----------------

**O**.**S**. **No**. 222/2004

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 03.01.2024.